சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் இயங்கும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய அனுமதித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை

அரசாணை (நிலை) எண்.43

நாள். 28.08.2014
திருவள்ளுவராண்டு 2045
ஜய, ஆவணி 12

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.142, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை, நாள் 06.07.2010.
2. அரசாணை (நிலை) எண்.110, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை, நாள் 14.5.2012.
3. அரசாணை (நிலை) எண்.72, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை, நாள் 30.04.2013.
4. சென்னை உயர்நீதிமன்றத்தில் (மதுரை கிளை) தொடுக்கப்பட்ட வழக்கு எண். W.P.No.4451/2012-இல் பிறப்பிக்கப்பட்ட ஆணை, நாள் 01.10.2012.
5. சென்னை உயர்நீதிமன்றத்தில் (மதுரை கிளை) தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். W.A.No.792/2012 மற்றும் தொகுப்பு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தடையாணை, நாள் 21.08.2013.
6. இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், அவர்களின் கடித ந.க.எண்.4083/இ3–2/2014, நாள் 18.07.2014.

+++++

ஆணை:

பார்வை 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களில் காலியாக உள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியிடங்களை நிரப்பும்பொழுது இனசுழற்சியினை தவறாமல் பின்பற்ற வேண்டும் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை 2–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் காலியாக உள்ள அங்கன்வாடி பணியிடங்களை நிரப்புவதற்கு, உரிய கல்வித்தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீட்டு முறை, பணியாளர் தேர்வு முறை, மையத்திலிருந்து தூரச்சுற்றளவு கடைபிடிப்பது மற்றும் பதவி உயர்விற்கான சதவிகிதம் ஆகியவற்றை பின்பற்றி

பணியாளர்களை நியமனம் செய்வதற்கு நடைமுறைகளை வகுத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. பார்வை 3–இல் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் 12.09.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 31.07.2011 வரை காலியாக உள்ள 28,596 பணியிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. பார்வை 4–இல் படிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பில், அரசாணை (நிலை) எண்.72, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை, நாள் 30.04.2013ல் சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களில் ஏற்பட்ட 28,596 காலிப்பணியிடங்களை நியமனம் செய்வதற்கென விதிக்கப்பட்ட விதிகளில் ஒன்றான 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் தான் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விதி அரசியல் சட்ட சாசனம் விதி 14 மற்றும் 16க்கு முரணாக உள்ளது என்று குறிப்பிட்டு இப்பணி நியமனத்திற்கு மதுரை உயர்நீதிமன்றத்தால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

5. பார்வை 5–இல் படிக்கப்பட்ட நீதிமன்ற வழக்கில் இந்நேர்வு குறித்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் அரசு சார்பில் மேல்முறையீடு தாக்கல் செய்த வழக்கு எண். W.A (MD) No.792/2012இல், மதுரை உயர்நீதிமன்றம் வழக்கு எண். W.P.(MD) No. 4451/2012இல் பிறப்பித்த ஆணைக்கு 21.08.2013ல் தடையாணை பிறப்பித்துள்ளது.

6. பார்வை 6ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் 01.08.2011ற்கு பிறகு 01.06.2014 அன்றைய நிலவரப்படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் 17,190 அங்கன்வாடி பணியாளர் காலி பணியிடங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்து மாவட்ட வாரியான காலிப்பணியிட விவரங்களையும் அரசுக்கு இணைத்தனுப்பி, உரிய ஆணையை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

7. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் அனுப்பியுள்ள கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் காலியாக உள்ள பணியிடங்களான அங்கன்வாடி பணியாளர், குறு மைய அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகியவற்றின் மொத்த காலிப்பணியிடங்கள் 17,190–ஐ நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்ய அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மாவட்ட வாரியான காலிப்பணியிடங்களின் விவரம் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. இப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் பணி நியமன ஆணையில், இந்நியமனம் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்கு எண். W.A (MD) No.792/2012-ற்கு உட்பட்டதாகும் என குறிப்பிட்டு பணிநியமன ஆணையை வழங்குமாறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

9. இந்நியமனங்களை மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி விளம்பரத்தின் மூலம், தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று கல்வித்தகுதி, வயது வரம்பு, இட

ஒதுக்கீட்டு முறை, பணியாளர் தேர்வு முறை, மையத்திலிருந்து தூரச்சுற்றளவு கடைபிடிப்பது மற்றும் பதவி உயர்விற்கான சதவிகிதம் ஆகியவற்றை பின்பற்றி அந்தந்த பதவிக்குரிய தேர்வுக்குழுவின் மூலம் பணி நியமனம் செய்ய இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

10. மேலே பத்தி 7–இல் கூறப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான பணியாளர்களை தெரிவு செய்த பின்னர், அவரவர்களுக்கு தற்பொழுது நடைமுறையில் உள்ளபடி வழங்கப்பட வேண்டிய ஊதியம், தற்பொழுதுள்ள உரிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

11. மாவட்ட வாரியாக காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்த விவரத்தையும் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கும்படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

12. இந்த அரசாணை நிதித்துறையின் இசைவினை அ.சாகு.எண். 43139/நிதி (சந)/2014, நாள் 19.08.2014 பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.
சென்னை – 600 113.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை – 600 015.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை –600 003.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 005/35/79
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்

நிதி (சமூக நலம்) துறை, சென்னை – 600 009
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (ச.ந.4)த் துறை, சென்னை –600 009.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தலைமை அரசுத்துறை நிறுவன தணிக்கையர் அலுவலகம், சென்னை –600 002.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28.8.14
பிரிவு அலுவலர்.

இணைப்பு
(அரசாணை (நிலை) எண்.43, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந7-1) துறை, நாள் 28.08.2014)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்
மாவட்ட வாரியாக காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை

| வ.எண். | மாவட்டம் | காலிப்பணியிடம் | | | |
|---|---|---|---|---|---|
| | | அங்கன்வாடி பணியாளர் | குறு அங்கன்வாடி பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் | மொத்தம் |
| 1 | அரியலூர் | 79 | 2 | 110 | 191 |
| 2 | சென்னை | 151 | 36 | 298 | 485 |
| 3 | கோயம்புத்தூர் | 230 | 20 | 291 | 541 |
| 4 | கடலூர் | 308 | 1 | 372 | 681 |
| 5 | தர்மபுரி | 162 | 8 | 182 | 352 |
| 6 | திண்டுக்கல் | 366 | 4 | 271 | 641 |
| 7 | ஈரோடு | 234 | 5 | 259 | 498 |
| 8 | காஞ்சிபுரம் | 371 | 21 | 353 | 745 |
| 9 | கன்னியாகுமரி | 258 | 5 | 249 | 512 |
| 10 | கரூர் | 106 | 1 | 124 | 231 |
| 11 | கிருஷ்ணகிரி | 132 | 60 | 212 | 404 |
| 12 | மதுரை | 485 | 1 | 408 | 894 |
| 13 | நாகப்பட்டினம் | 127 | 13 | 140 | 280 |
| 14 | நாமக்கல் | 173 | 1 | 217 | 391 |
| 15 | நீலகிரி | 51 | 3 | 42 | 96 |
| 16 | பெரம்பலூர் | 55 | 2 | 77 | 134 |
| 17 | புதுக்கோட்டை | 361 | 18 | 194 | 573 |
| 18 | இராமநாதபுரம் | 266 | 16 | 209 | 491 |
| 19 | சேலம் | 320 | 0 | 382 | 702 |
| 20 | சிவகங்கை | 192 | 23 | 192 | 407 |
| 21 | தஞ்சாவூர் | 254 | 44 | 323 | 621 |
| 22 | தேனி | 204 | 1 | 135 | 340 |
| 23 | திருவள்ளூர் | 358 | 15 | 332 | 705 |
| 24 | திருவாரூர் | 113 | 10 | 135 | 258 |
| 25 | திருநெல்வேலி | 399 | 10 | 334 | 743 |
| 26 | திருப்பூர் | 183 | 16 | 196 | 395 |
| 27 | திருவண்ணாமலை | 395 | 68 | 493 | 956 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 270 | 9 | 362 | 641 |
| 29 | தூத்துக்குடி | 294 | 2 | 242 | 538 |
| 30 | வேலூர் | 596 | 2 | 675 | 1273 |
| 31 | விழுப்புரம் | 493 | 9 | 463 | 965 |
| 32 | விருதுநகர் | 278 | 3 | 225 | 506 |
| | மொத்தம் | 8264 | 429 | 8497 | 17190 |

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு செயலாளர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28.8.14
பிரிவு அலுவலர்.

28.8.2014